

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## இனி, கவலையில்லை!

உங்கள் எல்லாப் பொக்கிஷங்களையும் பரலோகத்திற்கு மாற்றுதல் செய்து விடுங்கள்! இது ஒன்றே நீங்கள் கவலையிலிருந்து விடுதலையாவதற்கு இயேசு கற்பித்த, மாறாத நித்திய வழியாகும்! ஏனெனில், உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ 'அங்கே உங்கள் இருதயம் இருக்கும்!' என இயேசு வாக்குரைத்தார் (மத்.6:19-21). நீங்கள் மிகவும் அதிகமாய் நேசிக்கும் உங்கள் பிள்ளையை மீண்டும் தேவனுக்கே திருப்பிக்கொடுத்துவிடுங்கள்! உங்களுக்கு மிகவும் பிரியமான யாதொரு இவ்வுலக உடைமைகளையும் தேவனிடமே கையளித்துவிடுங்கள்! அவர் அதை என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறாரோ அதைச் செய்வதற்கு அவருக்கே முழு சுதந்திரம் கொடுத்து விடுங்கள். அவர் விரும்பினால், அவ்வுலகப் பொருட்கள் 'திருடப்படுவதற்குக்கூட' அனுமதிக்கலாம் அல்லது அவைகள் உடைந்து நாசமடைவதற்கும் அனுமதிக்கலாம்! இவ்வாறு நம்முடைய எல்லா விருப்பங்களையும் இப்பூமிக்குரியவைகளிலிருந்து விலக்கி பரலோகத்தில் வைத்துவிட்டால், நாம் கவலை கொள்வதென்பது ஒருக்காலத்தும் நிகழாததொன்றாய் மாறிவிடும் என்பதில் துளியும் சந்தேகமே இல்லை!

*-tr*

பெட்டகம் 39 | மே 2023 | பரல்கள் 05



## பிழையான ஜீவியத்தை மறைக்க 'வேத வசனத்தை புரட்டுவது' தவறு!

உத்தம அடிகளார் பவுலைப்போல் "இவ்வுலக செல்வத்தின் மதிப்பு, குப்பை!" என பிரசங்கிப்பதற்கு இன்றைய பிரசங்கிகளுக்கு தைரியம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை! ஆனால் "இவ்வுலகத்தின் செல்வ செழிப்பே இயேசு வழங்கும் சுவிசேஷம்" என துணிகரமாய் பிரசங்கிக்கிறார்களே, அதுதான் கொடுமை!

அன்று 30 வெள்ளிகாசுக்காக இயேசு கிறிஸ்துவின் முதுகில் குத்திய யூதாஸ் காரியோத்தின் கொடுமையிலும் மோசமான கொடுமை! அவனாவது அந்த 30 வெள்ளிக்காசை அல்லது உலக செல்வத்தை தூக்கி எறிந்து விட்டு, செத்துப் போனான்! இவர்களோ உலகத்தின் செல்வத்தை கிறிஸ்தவ மேடைகளில் உயர்த்திக் காட்டி, பேரழிவுக்குள் திரளான ஜனங்களை நடத்திச் செல்வது கிறிஸ்துவுக்கும், இவர்களின் பிரசங்கங்களைக் கேட்கும் கிறிஸ்தவர்களுக்கும் இழைத்திடும் கொடிய வஞ்சகம்!

தங்களின் தாறுமாறான உபதேசங்களுக்கு ஏற்றார்போல், தேவ வசனத்தையே தாறுமாறாய் புரட்டும் நய வஞ்சக பிரசங்கிகளுக்கு நாம் விலகி நிற்போமாக! வேதத்தை நேசித்து வாழ்ந்த உத்தம தியாக புருஷர்களின் களங்கமற்ற கிறிஸ்துவின் ஆவியை மாத்திரமே பருகி வாழ்வோமாக! ஆமென்.

*-Ed*

### 2023 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்

வருட சந்தா ரூ.**170/-** தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **மே 10-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் **3**பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**140/-** அயல்நாடு ஒரு பிரதி ரூ.**950/-** அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் **'புதிது'** என்று குறிப்பிடவும். நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 9843049935 Ph (O) 0452 - 3585200
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## கர்த்தர் நடத்தும் பாதையின் வழி, படிப்படியாய் திறக்கும்!

*நம் விசுவாசமே, பயணத்தின் நிறைவை அடையும்*

**ந**ம் கிறிஸ்தவ ஜீவியத்தின் வாழ்க்கை பயணம் "நீ 'விசுவாசத்தில்' நடக்கும்போது, உன் வழி படிப்படியாய் திறக்கும்! அதில் இடறல் ஏற்படுவதில்லை!" என்றே நீதிமொழிகள் 4:12 (ஆங்கில வேதாகமம்) எடுத்துரைக்கிறது. விசுவாசத்தில் நிறைந்து முன்னேறும் ஒரு பயணியின் காலுக்கு கீழாகவே, தேவன் ஒரு விசுவாச பாலத்தைக் கட்டுகிறார். 'விசுவாசம்' என்ற மேன்மையை அறியாதவனுக்கு, அந்த பாலத்தை அவர் கட்டுவதில்லை! பாலத்திற்கு ஒரு அடி மாத்திரமேகூட, அவர் கட்டி வைத்து காட்டினாலும், அது விசுவாச பாலம் ஆகாது! ஏனெனில், காணக்கூடிய யாதொன்றும், விசுவாசத்தினால் உண்டானது அல்ல.

சில அயல் நாடுகளின், சாலையில் தானாக திறக்கும் கதவுகள் உண்டு! வேகமாய் முன்னேறும் ஒரு பயணி, அந்த கதவின் அருகில் நெருங்கியவுடன், அது தானாகவே திறந்துவிடும். ஆனால், அவன் அந்த மூடிய கதவை நெருங்கிச் செல்லும் வரை, அந்த கதவு அவனுக்குத் திறக்காது!

**'கதவு திறக்கவில்லையோ?' என எண்ணி பயணத்தை நிறுத்தி அவன் தூரத்தில் நின்றுவிட்டால் அந்த கதவு அடைப்பட்ட கதவாகவே நின்று கொண்டிருக்கும், கதவு திறக்காது!**

ஆகிலும், தயக்கம் இல்லாமல் முன்னேறிச் செல்பவனுக்கு 'கதவுகள் திறந்து' வழி கொடுக்கும்! அது ஏனென்றால், முன்னேறிச் செல்கிறவன் பார்க்க முடியாத ஒரு 'விசை' (Switch) அவனுடைய காலடியின் கீழ் இருந்ததேயாகும்!

இது, எதைக் காட்டுகிறது என்றால் விசுவாசப் பயணத்தில் நடந்து வரும் நமக்கு ஏற்படும் **தடைகளை,** எவ்வாறு கடந்து சென்றிட முடியும் என்ற வழியை சுட்டிக் காட்டுகிறது. விசுவாசப் பாதையில் ஏற்படும் தடை, ஆறுகளாய் இருக்கலாம்! அல்லது இரும்பு தாழ்பாள்களாய் இருக்கலாம்! அல்லது ஒரு மலையாக கூட இருக்கலாம்! அப்படியிருக்க, தேவனுடைய வழியில் நடந்து முன்னேறிச் செல்ல அழைக்கப்பட்ட யாவரும் 'தடைகளுக்கு

நேராய்' துணிவுடன் முன்னேறிச் செல்ல வேண்டும்! அது ஆறாய் இருந்தால், அந்த ஆற்றின் தண்ணீரில் உங்கள் கால் பட்டவுடன், அது வற்றிப்போய் வழி திறக்கும்! அது ஒரு இரும்பு தாழ்பாளாய் இருந்தால், அது தானே திறந்து வழிகொடுக்கும். நீங்கள் மாத்திரம் விசுவாச தைரியத்துடன் முன்னேறிச் சென்றால், அதுபோதும்!

**அது ஒரு பெரிய மலையாய் இருந்தால் கூட, நீங்கள் இருதயம் கலங்காமல் தைரியத்துடன் முன்னேறிச் செல்லும்போது, அந்த மலை எங்கு விழுந்து மறைய வேண்டும் என்று விரும்பினீர்களோ 'அங்கே' அந்த கடலிலே விழுந்து மறையும்!**

நீங்கள் செல்லும் பயணம் 'கர்த்தர் வகுத்த பாதையில்' இருக்க வேண்டும்! அதை பொறுமையோடு கடந்து வரும் நீங்கள், தடைகளை ஒரு பொருட்டு என்று எண்ணாமல் முன்னேறிச் செல்ல வேண்டும்! கர்த்தருடைய நாமத்தில் நீங்கள் முன்னேறிச் செல்வதால், மலை போன்ற தடைகளும் காணப்படாமல் போய்விடும்! விசுவாச பாதை இத்தனை மேன்மையாய் இருக்க, நீங்கள் ஏன் உட்கார்ந்து அழுதுகொண்டு இருக்கிறீர்கள்? உங்களை நடத்தி வந்த சர்வ வல்லவரின் சத்தத்தைக் கேட்க உங்கள் தலையை அவரை நோக்கி ஏறிட்டுப் பாருங்கள்: "வீறுகொண்டு முன்னேறி, மேலே எழும்பி வா!" என்றே அந்த சத்தம் நம்மை கூவி அழைக்கிறது! ஆகவே, நாம் தைரியத்துடன் முன்னேறிச் செல்வோமாக. அது, வழி தெரியாத இருளாய் இருந்தாலும் முன்னேறிச் செல்லுங்கள். நம் வீறுகொண்ட விசுவாச நடையைப் பார்த்து, பாதை வழி திறக்கும்!

"ஆல்பைன் கணவாயைக் குறித்து" சில வினோதங்கள் உண்டு. அது என்னவெனில், அந்த மலைப் பாதை, சில இடங்களில், சாலை போல் காணப்படாமல் சில கம்பிகள் மாத்திரமே தோன்றும். அதை தாண்டிச் சென்றவுடன், **விரிந்த பாதை** நமக்கு முன்தோன்றும்! மேலும், அந்த கானகத்தின் சில இடங்களில், வழியை மரங்கள் அடைத்து நிற்பதைப்போல் தோன்றும். ஆனால் முன்னேறிச் செல்லும் ஒருவன் அந்த அடர்ந்த மரங்களின் திருப்பத்தில், அழகான ரஸ்தாவை காண்பான்! **உண்மைதான், நாம் விசுவாச பாதையில் போக போகத்தான் வழி திறக்கும்.** சில சமயங்களில் 'மேக ஸ்தம்பமும்' 'அக்கினி ஸ்தம்பமும் போல' நம்மை ஆதரித்து நடத்த, கர்த்தர் முன் வருவார். நம் விசுவாச பயணத்தில், ஆங்காங்கு தங்கும் சத்திரமும், உணவு சாலைகளும், வழிகாட்டும் சிநேகிதர்களும், **ஏற்ற சமயத்தில் நமக்கு முன் வரும்படி** கர்த்தர் உதவி செய்வார். இவ்வாறு, தன் விசுவாச பயணத்தில் மனம் தளராது நடந்து வந்து, களைத்து போன அந்த பயணத்தின் முடிவில்,

**நித்திய வீட்டின் இனிமையான வரவேற்பு** *நிச்சயமாய் கிடைக்கும். அன்று அவன், இனி இந்த களைப்பான பயணம் இல்லை.... என்று, ஆனந்தம் பாடி நித்திய மகிழ்ச்சிக்குள் பிரவேசிப்பான். அந்த ஆனந்த வீட்டில் தன்னைக்குறித்து எழுதப்பட்ட வாசகத்தையும் அவன் காண்பான்:*

*“அவன் மேல் நோக்கிய உச்சி பாதையை கடந்து, நடந்து, இரவிலும் நடந்து, சூரிய ஒளி தங்கும் இலக்கை நோக்கி தீவிரமாய் பயணம் செய்து வந்தான்! அவனுடைய பழைய இருண்ட வீட்டில் அவனைத் தேடினால், “அவன் இங்கு இல்லை, உயர்ந்த பாதையில் உச்சிதப் பட்டணத்திற்குள்” பயணம் சென்று பிரவேசித்துவிட்டான்! என்ற வாசகம் ‘அவனைக் குறித்து’ (உங்களைக் குறித்து) கெம்பீரமாய் எழுதப்பட்டிருப்பதைக் கண்டு அகமகிழ்வான்!*

*- Mrs.சார்லஸ் கஃவ்மென்*

---

## துன்பத்திற்கல்ல ‘மகிழ்ச்சிக்கே’ கர்த்தர் உத்திரவாதம் தருகிறார்!

*நம் மகிழ்ச்சி குன்றிட, மற்றவர்கள் காரணம் அல்ல*

*உத்தம கிறிஸ்தவ வாழ்க்கையை நாடுபவர்கள் கூட, தங்களுக்கு நேரிடும் உபத்திரவம் “நீண்டகால உபத்திரவமாய்” தங்களால் “தாங்கமுடியாத, பாரம்கொண்ட” உபத்திரவமாய் நிலைத்திருக்கும் என்றே* **அந்த உபத்திரவத்தை விசுவாசிக்கிறார்கள்!** *அது ஏனென்றால், இவர்கள் தேவனுடைய வார்த்தையை மனப்பூர்வமாய் விசுவாசிப்பதில்லை, அவ்வளவுதான்!*

*தேவனுடைய வார்த்தையோ* **அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம்!** *என சங்கநாதமாய் முழங்குகிறதே! (2கொரிந்தியர் 4:17). உங்களுக்கு நேர்ந்த உபத்திரவம் எத்தகையானது என நீங்கள் சிந்திப்பதோ, அல்லது நீங்கள் எப்படி அதை உணருகிறீர்கள் என்பதோ, ஒரு பொருட்டு அல்லவே அல்ல! வேதம் சொல்லுவது ஒன்று மாத்திரமே உண்மை! “அவைகள் லேசான உபத்திரவம்!” அல்லேலுயா! இப்போது நான் என்னதான் செய்ய வேண்டும்? என்று கேட்கிறீர்களா? சொல்லுவதை நன்றாய் கேளுங்கள்:* **“தேவனுடைய வார்த்தையை அப்படியே விசுவாசியுங்கள்”** *அவ்வளவுதான்.*

*என்னவோ தெரியவில்லை, ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் இந்த கிறிஸ்தவர்கள் வித்தியாசமாகவே நடக்கிறார்கள். இவர்கள் சொல்லுவதெல்லாம் “வேதம் சொல்லுவது சரிதான்....” என ஏதோ ஒரு தொனியில் ஆரம்பித்து.... “ஆனால், எங்களுக்கு இந்த உபத்திரவம் சற்று கொடுமையானதுதான்” என குமுறலோடு கூறுகிறார்கள். இதைவிட வேறு மதியீனத்தை எங்கேயாவது கண்டிருக்கிறீர்களா?*

*இவர்களின் குமுறல் அத்தனையும் அவபக்தி! அருவருப்பு! இவர்கள் தேவனுடைய வார்த்தையை கவனிக்கவே இல்லை.... சாத்தானின் குரலைத்தான் கவனித்திருக்கிறார்கள். இவர்களின் இப்போதய பரிதாபநிலைக்கு இன்னொரு காரணமும் உண்டு. அதாவது, இத்தனை அற்புதமான தேவனுடைய வார்த்தைக்கு ஆதாரமாய் அமைந்த 'அடுத்த வசனத்தை' இவர்கள் கவனிப்பதற்கு அக்கறை கொள்ளவேயில்லை என்பதுதான்! அந்த வசனத்தை இப்போதாவது சற்று கவனித்து வாசியுங்கள்: "ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளே நித்தியமானவைகள்!" (வசனம் 18). கண்டீர்களா இரகசியத்தை?*

**இப்போது 'காணப்படும்' சூழ்நிலையில் நீங்கள் அவ்வளவாய் ஆட்கொள்ளப்பட்டு மூழ்கிவிட்டீர்களே! ஆகவேதான்...... சர்வமும் உங்களுக்கு வேதனையும், குழப்பமாய் தோன்றுகிறது! "உங்கள் சர்வ வல்ல தேவன் உயிரோடிருக்கிறார்" என்பதைக்கூட நீங்கள் மறந்து விட்டீர்கள்!**

*தேவன் எங்கே? நித்தியம் எங்கே? அவர் வழங்கும் இரட்சிப்பு எங்கே? அத்தனையும் உங்கள் கண்ணிலிருந்து மறைந்தே போய்விட்டது! இப்போது "காணப்படும்" சூழ்நிலையில்தான் உங்கள் கண்கள் நிலைகுத்தி நின்றுவிட்டன! தேவனுக்குரிய அற்புத வழிகளைக் காண உங்கள் கண்கள் குருடாகிவிட்டன! இது என்ன? அவபக்தி, வேத வசனத்தைப் புறக்கணிக்கும் அவபக்தி!*

*நீங்கள் தேவனுடைய வார்த்தையை அப்படியே விசுவாசித்து வாழவில்லையென்றால், 'வேதனைகளை' உங்கள் சொந்த கைகளே உருவாக்கிவிடும்! நீங்கள் என்னசெய்ய வேண்டுமோ, அதை நீங்கள் செய்யாமல், உங்கள் கரங்களோ தீவிரமாய் துன்பத்தை ஏராளமாய் உருவாக்கிவிடும்!*

**மேலும், என்னுடைய துன்ப நேரத்தில் மற்றவர்கள் எனக்கு என்ன செய்யவேண்டும்? என எண்ணுவது உத்தம கிறிஸ்தவம் அல்ல. "எனக்கு மற்றவர்கள்...." என எண்ணுபவன் பிசாசு! "நான் மற்றவர்களுக்கு...." என எண்ணுவதே அன்பின் திவ்விய குணம்!**

*தேவன் காட்டும் இந்த வழியின்படி, மற்றவர்கள் எனக்கு என்ன செய்ய வேண்டும்? என்ற எண்ணத்தை 'இப்போதே' விட்டுவிடுங்கள்! இரட்சிப்பு 'இன்றே' உங்களுக்குத் துவங்கிவிடும். "குயவன் வடித்த குண்டு சட்டி" என ஓர் பழமொழி கூறுவார்கள்! அது நூற்றுக்கு நூறு உண்மையானதுதான். அப்படித்தான், "உங்கள் சொந்த மகிழ்ச்சியை உங்கள் கரங்கள்தான் வடித்திட முடியும்" அதேபோல, "உங்கள்*

*மகிழ்ச்சியின்மையையும் உங்கள் சொந்த கரங்கள்தான் வனைந்து வடித்துவிட்டது".*

**ஆகவே, உங்களின் இன்றைய துயர சூழ்நிலைக்கு, உங்களைத்தவிர "வேறு ஒருவர்கூட" காரணம் இல்லவே இல்லை!**

*இதனிமித்தமே நம் ஆண்டவர் இயேசு "நீங்கள் மற்றவர்களை குற்றம் தீர்க்காதிருங்கள்" என கூறினார் (மத்தேயு 7:1). மற்றவர்கள் இதைச் செய்திருக்கக் கூடாது.... அப்படி ஏன் அதைச் செய்தார்கள்? என யாதொன்றையும் நான் முனங்குவது இல்லை! ஆண்டவர் இயேசு* "**மற்றவர்களை தீர்ப்பு** (JUDGE) **செய்யாதிருங்கள்!**" *என்றால், அவ்வளவுதான்! நான் பல்லாண்டு காலமாய், விவரிக்க இயலாத மகிழ்ச்சியுடன் வாழ்வதின் சில காரணங்களில், இந்த வசனத்தின்படி நான் வாழ்ந்து வருவதும் ஒரு காரணமாகும்!*

*இவ்வாறு உங்களை மாத்திரமே நியாயந்தீர்த்து வாழாமல் "பிறரை" யாதொரு பிரச்சனைக்கும் விரல்நீட்டினால், "உலகத்தோடே நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவீர்கள்" என 1கொரிந்தியர் 11:31,32-ம் வசனங்கள் எத்தனை ஆணித்தரமாய் கூறுவதைப் பாருங்கள்! ஆகவே, வேதம் செப்பிய மொழிகளை அப்படியே பின்பற்றி வாழுங்கள்! உங்கள் சந்தோஷம் நாளுக்குநாள் கூடுமே அல்லாமல் அதில் ஒரு துளிகூட, இவ்வையகத்தில் ஒரு கோமகன்கூட அபகரிக்க முடியாது, ஒருக்காலும் முடியாது! அதற்கு, நான் "ஜவாப்தி" செய்து உறுதி அளிக்கிறேன்! உங்கள் சந்தோஷம் நீடூழி வாழ்வதாக!*

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

---

## 'தேவனுக்கு முன்பாக' சோதித்து வாழுங்கள்!

*மறைவான பாவத்தை தேவன் மாத்திரமே காட்டுவார்*

*ஒவ்வொரு நாளிலும், ஒவ்வொரு வாரத்திலும், ஒவ்வொரு மாதத்திலும், ஒவ்வொரு வருடத்திலும்.... அதன் முடிவில், நம்மை* **தேவனுக்கு முன்பாக** *சோதித்தறிந்து வாழ்வது இப்பூமியில் நமக்கு கிட்டிய பாக்கியமாகும்!*

*சாக்ரடீஸ் என்ற தத்துவ ஞானி ஒரு சமயம் கூறும்போது, "சோதித்தறியா வாழ்வு வாழ்பவன், சீரழிந்த வாழ்க்கை வாழ்பவன்!" என மிக ஆணித்தரமாய் கூறினார்.* **சாதாரண இவ்வுலக வாழ்க்கைக்கே** *அந்த ஞானி இவ்வாறு கூறவேண்டியது அவசியமென்றால்,* **நித்திய வாழ்விற்கென** *"உங்களை ஆராய்ந்து சோதித்தறியுங்கள்" என பரிசுத்தாவியானவர் நம்மிடம் கூறுவதற்கு நாம் செவிமடுக்க வேண்டியது எத்தனை அவசியமாயிருக்கிறது! ஆம், நாள்தோறும்*

*நம்மை தேவனுக்கு முன்பாக நிச்சயமாய் சோதித்தறிந்து வாழ்ந்திட வேண்டும்!*

**பாவம் என்பது, எந்த ரூபத்திலும் பாவம்தான். இது "எனக்குரிய" பெலஹீனம்! என யாதொன்றையும் புறக்கணித்திட இயலாது.... வேண்டுமென்றால், அவைகள் உங்கள் "இரகசிய பாவம்" என நீங்கள் கூறுவதே பொருத்தமாகும்!**

*இதுபோன்றவர்களை பவுல் அப்போஸ்தலன் மிக கண்டிப்பான குரலில் "(இது எனக்குரிய பெலஹீனம் என) நீங்கள் மேன்மை பாராட்டுகிறது நல்லதல்ல! கொஞ்சம் புளித்தமா, பிசைந்தமா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா? ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு,* **பழைய புளித்தமாவைப் புறம்பே** *கழித்துப் போடுங்கள்...." என கூறினார் (2கொரிந்தியர் 5:6,7).*

*தன்னை உத்தம கிறிஸ்தவனாக அறிக்கை செய்து வாழும் யாராயிருந்தாலும் "***கிறிஸ்துவைப்போல் அல்லாத சுபாவங்களை***" தங்கள் முதுகுக்குப் பின்னால் பதுக்கிவைத்து ஒருக்காலும் வாழ்ந்திட இயலாது! "அந்த கொடிய பாவ பறவைகள்" வானுயரப் பறந்து, அனேகரை பாழ்படுத்தி, முடிவில் உங்களிடமே திரும்பிவந்து "நித்தியமான பேரிழப்பை" உங்களுக்கே கொண்டு வந்து வைத்து விடும்!*

**அதுமட்டுமல்ல, அவர்கள் தங்கள் வீட்டில் தனிப்பட்ட - திரைக்குப் பின்னால் விளைவித்த பாவங்கள், பரிசுத்தவான்களின் சபையில், ஓர் நாள் வெடித்து சிதறிவிடும்! என்பதும் மறுக்க முடியாத உண்மை!**

*சபையில் உள்ள விசுவாசியோ அல்லது ஊழியனோ.... அவர்கள் யாராயிருந்தாலும், தங்களுக்கு நேரிட்ட சோதனைகளுக்கு "இரகசியமாய்" தங்களை ஒப்புக்கொடுத்திருந்தால், அது வெகு விரைவிலேயே "ஓர் தொத்து நோயைப்போல" அனேகருக்கு 'மளமளவென்று' பரவிவிடும். இவ்வாறு,* **மறைவான தொத்து நோய் கொண்டவன் 'ஒருவனை'** *சபை விட்டுவைத்திருந்தாலும், காலா வட்டத்தில் அந்த சபை சீர்கெட்டுப் போகும்! என்பது தெள்ளத் தெளிவான உண்மையாகும்! அந்த "கறைபட்ட தண்ணீர்" வெள்ளமாய் புரண்டு, புரண்டு, ஏராளமான ஜனங்களை அதிக கறைக்குள் நடத்தி விடும் என்பதும் திண்ணம்!*

*காரியம் இப்படியாய் இருப்பதால், "நம்மை நாமே தேவனுக்கு முன்பாக நிறுத்தி சோதித்தறிந்து வாழ்ந்திடும் வாழ்க்கை மிக மிக முக்கியம் நிறைந்ததாய் இருக்கிறது!" தன்னை சோதித்து வாழாத*

கிறிஸ்தவனின் ஜீவியம் "பண்டு பார்க்காத தோட்டம் போலாகிவிடும்". ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே, அவனுடைய தோட்டத்தில் ரோஜா மலர்களல்ல, தக்காளிப் பழங்கள் அல்ல...... 'களைகள்' மண்டி மூடி விடும்! மேலும், தன்னை சோதித்து வாழாத கிறிஸ்தவனின் ஜீவியம் "பூட்டிய வீட்டைப் போலாகிவிடும்". உங்கள் வீட்டைப் பூட்டிவிட்டு சில வாரங்கள் கழித்து திறந்து பாருங்கள்.... **எங்கிருந்துதான் இவ்வளவு தூசிகள் வந்ததோ** என நீங்கள் வியந்து போவீர்கள்! தன்னை சோதித்து வாழாத கிறிஸ்தவனின் ஜீவியம் "கற்றுக் கொடுக்காத பிள்ளையைப் போலாகிவிடும்". உங்கள் பிள்ளைக்கு போதனைகளையும், ஒழுக்கத்தையும் கற்றுத்தர அக்கறை செலுத்தாமல், அப்படியே விட்டுவையுங்கள்.... வெகு விரைவில் உங்கள் பிள்ளை காட்டு-மிராண்டி குணம் படைத்தவனாய் மாறிவிடுவான்!

கவனம்! தேவனுக்கு முன்பாக உங்களை வைத்து, உங்களை ஆராய்ந்து சோதித்து வாழுங்கள்.... இல்லையேல், உங்கள் வாழ்வு சீரழிந்து போய்விடும்! அந்த கதி நம் ஒருவருக்கும் ஏற்படாதிருக்க தேவன்தாமே அருள்புரிவாராக, ஆமென்.

*- A.W.டோசர்*

---

## வரங்களல்ல 'தாழ்மையே' சிலுவை பாதை நடத்தும்!

*சத்தியத்தை பிரசங்கித்துவிட்டு 'வாழாதிருப்பது' துயரம்*

ஓர் நீண்ட ஜெனிவா ஊழியத்திற்குப் பிறகு, தந்தை லா - கோம்பே அவர்கள் ரோம் நகரில் உள்ள தன் வீட்டிற்குத் திரும்பினார். தன் இல்லத்திற்குத் திரும்பி வந்த தந்தை லா-கோம்பே அவர்களை மிகுந்த மரியாதையோடு, அந்த மடத்து கன்னியாஸ்திரீகளும் மற்றுமுள்ள அலுவலகப் பணியாளர்களும் தந்தை லா-கோம்பே அவர்களின் பரிசுத்தமாகும் உபதேசத்தை வெகுவாய் போற்றி ஏற்றுக்கொண்டிருந்தார்கள். இவ்வாறு இருந்தும்கூட, அந்த மடத்து கன்னியாஸ்திரீகள் என் மகளை அக்கறையோடு கண்காணிக்கத் தயங்கி நின்றார்கள். நான் எடுத்துக்கொண்ட அக்கறையான நடவடிக்கைகளோ, என் மகளுக்குப் பிடிக்கவில்லை. முன்பு அவள் வசித்த மடத்தில் கற்றுக்கொண்ட சில கெட்டபழக்கங்களை மாற்றுவதற்கு நான் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் தோல்வியுற்றன.

ஒருவேளை, தந்தை லா-கோம்பே அவர்கள் திரும்பிவிட்டபடியால் காரியங்களை செவ்வைப்படுத்தி, நான் மன ஆறுதல் பெற்றுக்கொள்ள உதவிசெய்வார் என எண்ணினேன். பின்பு என்னை நான் திடப்படுத்திக் கொண்டு "தேவனையே முற்றிலும் சார்ந்து கொள்ள" தீர்மானித்தேன்.

ஜூலை 1682-ம் ஆண்டு **உருசுலின் மடத்தில் சேர்ந்த என் சகோதரி,** என் இருப்பிடத்திற்கு வர அனுமதி பெற்று வந்தாள். 'என் காலத்திற்கு ஏற்ப' அவள் வந்தபோது, தன்னோடு கூட ஒரு பணிப்பெண்ணையும் அழைத்து வந்திருந்தாள். அவளுடைய ஏற்ற செயலைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன். சிறந்த ஆசிரியையான என் தங்கை, என் மகளுக்கு பாடங்களை கற்றுக்கொடுக்க ஆரம்பித்தாள். ஆனால் என் மகளோ கற்றுக்கொடுத்த என் தங்கையிடம் 'உரசல்கள்' பல ஏற்படுத்தினாள். சற்று பொறுத்துக் கொள்ளும்படி என் தங்கையை சமாதானப்படுத்த முயற்சித்துப் பார்த்தேன். ஆனால், அது பலன் அளிக்கவில்லை. இச்சமயத்தில் நான் கற்றுக்கொண்ட பாடம் என்னவெனில்: ஒருவருக்கு எவ்வளவுதான் திறமையும் வரங்களும் இருந்தாலும், அதோடு சேர்ந்து இயேசு கற்றுத் தந்த தாழ்மை இல்லாவிட்டால், ஒரு பலனும் இருக்காது என்பதை விளங்கிக் கொண்டேன். தாழ்மை ஒன்று மாத்திரம்தான் 'உலக ஜீவனுக்கு ஒத்துப்போகாமல்' அதற்கு மரித்திட முடியும்!

என் தங்கை ஓர் சிறந்த கன்னிமாடத்தில் பணியாற்றி வளர்ச்சியடைந்தவள். "தாங்கள் பூரணத்தை நோக்கி வளருவதாக அடிக்கடி கூறிக்கொள்வாள்". ஆனால் 'பாடுகளை எதிர்கொண்ட பிறகுதான்' தான் பூரணத்தின் ஆரம்ப எல்லையை கூட தொடவில்லை என்பதை அவளே உணர்ந்து கொண்டாள்.

**"ஓ தேவனாகிய என் கர்த்தாவே! திறமையும் வரங்களும் ஓர் நபர் பெற்றிருந்தாலும், அந்த நபர், முழுவதும் தன் சுயத்தால் ஆட்கொள்ளப்பட்டு பூரணமற்றவராய் இருந்திட முடியும்" என்ற உண்மையை விளங்கிக்கொண்டேன்.**

மெய்யாகவே ஜீவனுக்குள் நடத்துகிற பாதை 'குறுகலாகவே' இருக்கிறது. அந்தப் பாதையில் நடந்து செல்பவர்கள், ஆண்டவர் கூறியபடி 'சிலராகவே' இருக்கிறார்கள். **"சுயத்திற்கு மரிப்பதென்பது" ஓர் உபதேசம் அல்ல. அது, கர்த்தர் முன் சென்ற வழி!** ஆண்டவர் நடந்து சென்றதைப் போலவே, தன் சுயத்தை மறுத்து நடந்து செல்லாதவர்கள், அவர்கள் பெற்ற எந்த உபதேசத்தாலும் பிரயோஜனமில்லை. ஆனால் இந்த வழியில் நிஜமாகவே நடந்து சென்றவர்கள் "கர்த்தர் என்னை விசாலமான இடத்திற்கு கொண்டு வந்து, என்மேல் பிரியமாயிருந்தார்" (சங்.18:19) என்றே அனுபவபூர்வமாய் மகிழ்வுடன் கூறுவார்கள். மெய்தான், சிலுவை பாதையின் தாழ்மையும், சிறுமைப்படுவதும் மாத்திரமே, நம்மை இந்த விசாலமான ஜீவியத்திற்குள் கொண்டு வர முடியும்!

- மேடம் குயான்

## சம்பளமல்ல 'தெய்வ அன்பே' ஊழியத்தின் ஆணிவேர்!

*மரணபரியந்தம் பணி செய்வான் உத்தம ஊழியன்*

*சகோதரரே! கிறிஸ்துவின் அன்பு நம்முடைய உள்ளத்திலிருக்குமானால் அவருக்கு ஊழியம் செய்யாமல், நம்மால் இருக்கவே முடியாது! அந்த 'தெய்வ அன்பு' கர்த்தரின் ஊழியத்திற்கு நம்மை நெருக்கி ஏவும் என்றே பவுல் தன் நிருபத்தில் கூறினார். மற்றவர்கள் நம்மை ஏவ வேண்டியதில்லை! இவ்வாறு கர்த்தருக்காக நீங்கள் செய்திடும் அன்பின் நன்றி ஊழியத்தை, தீவிரமாய் தியாகத்தோடு தொடர்ந்து செய்யுங்கள்!*

**கர்த்தருக்கு செய்திடும் எவ்வித ஊழியமானாலும், யாராவது சம்பளம் கொடுத்தால் செய்வோம் என எண்ணுவது, அன்பின் ஊழியமாகாது!**

*இவ்வாறு, கிறிஸ்துவின் அன்பை அறியாமல் சம்பளத்துக்காக மாத்திரம் வேலை செய்கிறவர்கள், சம்பளம் நின்ற அன்றே ஊழியத்தை நிறுத்திவிடுவார்கள். "ஏன் ஐயா, இப்பொழுது உங்கள் ஊழியத்தைக் காணோமே?" என கேட்பவர்களிடம், "நான் வேலையை விட்டு நீங்கி இரண்டு மாதமாச்சே உங்களுக்குத் தெரியாதா?" என்பார்கள். "அப்படியானால் இப்பொழுது என்ன செய்கிறீர்கள்?" என்ற கேள்விக்கு, "கொஞ்சம் வியாபார முயற்சி செய்கிறேன்" என்றுகூட பதில் கூறுபவர்கள் உண்டு. "வியாபாரம் செய்தாலென்ன, கர்த்தருக்காகக் கொஞ்சம் வேலை செய்யக்கூடாதா?" என நீங்கள் கேட்டால், அதற்கு சட்டென்று "அதற்காக எனக்கு சம்பளம் கொடுக்கிறது யார்?" என, இப்படியெல்லாம் சொல்லக்கூடிய அநேகர் உண்டு. "இனிமுதல், மிஷன் சம்பளம் நிறுத்தப்பட்டது" என்ற நிலை நேரிடுமானால் கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்கிறவர்கள் இன்னாரென்று அன்றுதான் வெளிப்படும்!*

**மெய்யாகவே, கர்த்தருக்கு அன்பின் ஊழியஞ் செய்யப் புறப்படுகிறவர்கள் தங்களுக்கு வேண்டியதெல்லாவற்றிற்காகவும் கர்த்தரையே நம்ப வேண்டியதிருப்பதால் அவர்களுடைய ஜீவியமும் ஊழியமும் வல்லமை கொண்டதாய் இருக்கும் என்பதற்கு சந்தேகமில்லை!**

*உபகாரம் அல்லது காணிக்கை பெற்றுக்கொள்ளுகிறதற்கு விரோதமாய் நான் ஒரு வார்த்தையும் பேசுகிறதில்லை. ஏனென்றால் "சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினாலே பிழைப்புண்டாக வேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்" (1கொரி.9:14). "உங்களுக்கு ஊழியஞ் செய்யும்படிக்கு மற்ற சபைகளிடத்தில் (அவர்களாக கொடுத்த)*

*சம்பளத்தைப் பெற்றேன்" என்று அப்போஸ்தலனும் சொல்லுகிறார் (2கொரி.11:8). ஆனால், குணப்படாதிருந்தும், இயேசுவின் அன்பை அறியாதிருந்தும்,* **பிழைப்புக்காக மாத்திரம்** *இந்த ஊழியத்தில் பிரவேசிப்பது மகா மோசம் என்றே கூறுவேன்!*

*கிறிஸ்துவின் அன்பை ருசித்தவனுடைய காரியமோ அப்படியல்ல. அவன் சம்பளம் பெற்றாலும் பெறாமற்போனாலும்; எங்கேயிருந்தாலும் என்ன வேலை செய்தாலும்; தன் ஜீவ காலமெல்லாம்* **கர்த்தருடைய சிறந்த ஊழிய சாட்சியாக** *விளங்குவான்.*

**"சுவிசேஷத்தைப் பிரசங்கியாவிட்டால் எனக்கு ஐயோ" என்றல்லவா பவுல் கூறினார்! பெரிய காரியங்களைச் செய்யக்கூடாவிட்டாலும், தன்னாலியன்றதை இயேசுவின் தொண்டன் செய்யாதிரான்!**

*மற்ற உத்தியோகஸ்தர் பென்ஷன் வாங்கினபின், தங்கள் வேலையை விட்டு நீங்கிவிடுகிறதுபோல, இது முற்றிலும்விட்டு நீங்கக்கூடிய ஊழியமல்ல! உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்ட தேவ ஊழியரில் சிலர், தங்கள் எஞ்சிய காலத்தை வேறுவிதமாய் செலவிடுகிறதுண்டு. அது சரியல்ல!*

*ஒரு சமயம், பக்தியுள்ள தேவ ஊழியக்காரர் ஒருவரை, அவருடைய விருத்தாப்பியத்தினிமித்தம் வேலையை விட்டு இளைப்பாறும்படி கேட்டுக்கொண்டார்கள். அவர் பலவீனமும் கண்பார்வையற்றவருமாயிருந்தார். பொறுப்பான வேலையிலிருந்து தான் நீங்கிக்கொண்ட போதிலும், தன் காலத்தை வீணிலும் சோம்பலிலும் கழிக்காமல் வேத வசனத்தை வாசிக்கக் கேட்பதிலும், வீடுகளைச் சந்தித்து ஜெபம் செய்வதிலும், ஆலயத்திற்கு பயணித்து பிரசங்கம் பண்ணுவதிலும், பக்கத்துக் கிராமங்களுக்குப்போய் சுவிசேஷத்தை அறிவிப்பதிலும், தன் சிநேகிதரோடு எந்தச் சமயத்திலும் ஆவிக்குரிய விஷயங்களில் சம்பாஷிப்பதிலும் மிக்க வாஞ்சையுடையவராயிருந்தார்! அவருடைய முகத்தில் எப்பொழுதும் பரம சந்தோஷம் குடிகொண்டிருந்தது!*

**நீங்கள் இளைப்பாறக்கூடாதா? என்று ஒருசமயம் அவரைக் கேட்டதற்கு, எங்கே இளைப்பாறுதல், இங்கேயா? என்று புன்னகையோடு சொன்னார்!**

*வேறொரு சமயம், "நீங்கள் ஏன் ஐயா இந்தக் கூட்டங்களுக்கு வந்து அலைகிறீர்கள்" என்று கேட்க: "அதைப் பார்க்கிலும் வேறெ வேலையென்ன?" என்றார். இவ்விதமாய் அந்த "நீதிமானுடைய பாதை* **நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய்** *பிரகாசிக்கிற சூரியப் பிரகாசம் போலிருந்தது". எல்லாராலும் சிறந்த பக்தனென*

மதிக்கப்பட்டு மறுமைக்குள் பிரவேசித்தார்! வேதாகமத்திலுள்ள பக்தர்களின் சரித்திரங்களைப் பார்த்தாலும், தற்காலத்திலுள்ள அநேக பரிசுத்தவான்களைக் கவனித்தாலும், அவர்களுடைய வயது எப்படியோ, அப்படியே அவர்களுடைய பக்தியும் வளர்ந்து கொண்டே போகிறதைக் காண்கிறோம்! 70 அல்லது 80 வயதாகியும் அவர்களுடைய வேத வாசிப்பையும், யோசனையையும், ஞாபகசக்தியையும், பிரசங்கத்தின் ஆழத்தையும், கவனிக்கும்போது ஆச்சரியமாயிருக்கிறது! அவர்களுடைய அழகு அவர்கள் நரையிலும், அவர்களுடைய ஞானம் அவர்கள் முகத்திலும், அவர்களின் பரிசுத்தம் அவர்கள் ஜீவியத்திலும், பிரத்தியட்சமாய் காணப்படுகிறது. தேவன் நம்மில் கொளுத்தின அன்பின் அக்கினி வரவர பெருக வேண்டியது நியாயமேயன்றி, அது எந்த விதத்திலும் குன்றிப்போகலாகாது!

**தேவ ஊழியருக்கு, ஓய்வு காலம் தரப்பட்டாலும், அவரோ கிறிஸ்துவின் அன்பைவிட்டு ஓய்வு பெறுவாரோ? நிச்சயமாய் இல்லை!**

இப்படியெல்லாம் வாழ்ந்து, ஊழியம் செய்யாமல், ஆவிக்குரிய ஜீவியத்தில் தளர்ச்சியடைந்து, வருகிறவர்களோடு வீண்கதைகளை பேசுவதும், தூங்கித்தூங்கி வீண்காலம் போக்குவதும், உத்தம ஊழியர்களின் லட்சணமல்ல! ஏன் இப்படி? என்று கேட்டால், 'ரிட்டயர்டு' ஆகிவிட்டேன் என்பார்கள். **கிறிஸ்துவின் அன்பிலிருந்து பிரிகிறதற்கும் பென்ஷன் உண்டோ?** தன் எஜமானை சந்திக்கும் நாள்வரை, தெய்வ பணியை தொய்வில்லாமல் செய்பவர்களே, கிறிஸ்துவின் உத்தம ஊழியர்கள்! ஆமென்.

- பரமானந்தம் ஐயர்

---

## 'சபைக்கு ஏற்படும் நிந்தை குறித்து' அக்கறை இல்லாத ஊழியம்!

*'மேய்ப்பனை' முழுதும் நம்பி பின்பற்றும் காலம் இதுவல்ல*

பரிசுத்தாவியின் கிரியை இந்த உலகத்திற்கு தவறான முறையில் காட்டப்படுவது, இன்று கிறிஸ்துவின் சபைக்கு ஏற்பட்ட மகா துயரமான நிந்தையாயிருக்கிறது. இவ்வாறு, பரிசுத்தாவியானவரின் தூய்மை 'தேவ தூஷணத்திற்குள்ளாவதை' ஏராளமான பாஸ்டர்கள் கண்டு கொள்ளாததைப்போல் இருக்கிறார்கள். **மேய்ப்பன் எவ்வழி, ஆடுகளும் அவ்வழி, என** ஆட்டு மந்தையைப்போல் நிற்கும் ஜனங்களும், கடுகளவுகூட பகுத்தறியும் உணர்வற்று நிற்கிறார்கள். கூட்டம் சேரும் சபைக்கு, இவர்களும் சேர்ந்து ஆயிரக்கணக்கில் செல்கிறார்கள்! அவர்களின் சுகமளிக்கும் கூட்டத்திற்கு இவர்களும் படையெடுத்துச் செல்கிறார்கள்! அங்கே மேடையில் சில துணிகர பாஸ்டர்கள்,

பரிசுத்த ஆவியை தவறாய் பயன்படுத்திக் காண்பிக்க..... இவர்களோ, யாதொன்றும் பகுத்தறிய அறியாமல், கரங்களை உற்சாகமாய் தட்டி பரவசமாய் தேவனைத் துதித்துக் கொண்டிருக்கிறார்கள்!

கிட்டத்தட்ட இன்றைய எல்லா பிரபல்யமான பெந்தெகோஸ்தே சபைகளிலும் "எழுப்புதல்" என்ற பெயரில், வேத ஆதாரம் இல்லாத பரிசுத்தாவியின் கிரியைகளை நர்த்தனம் செய்து காண்பிக்கிறார்கள். பரவசமான புதுப்புது உபதேசங்களை அறிமுகம் செய்கிறார்கள்! சில உண்மையான தலைவர்கள் இந்த உபதேசங்களை ஏற்றுக்கொள்வதா? அல்லது மறுப்பதா? என திக்குத் தெரியாமல் தவிக்கிறார்கள்!

**இவர்கள் பரிசுத்தாவியானவரின் அபிஷேகம் என அழைத்திடும் எந்த உபதேசங்களானாலும் 'அவைகள் வேதவசன ஆதாரமற்றதாக இருந்தால்' அவை அனைத்தையும் நிமிர்ந்து நிற்கும் தைரியத்தோடு, குப்பைத் தொட்டியில் தூக்கி எறியுங்கள்!**

பரிசுத்தாவியின் எழுப்புதல் என்ற பெயரில், தன்னடக்கம் இல்லாமல் உடம்பைக் குலுக்குவதும், தரையில் உருளுவதும், அரைப்பைத்தியம்போல் சிரிப்பதும், குடிகாரர்களைப்போல் அங்குமிங்கும் தள்ளாடுவதும், பாம்புகளைப்போல் உடம்பை நெளித்து நிற்பதும், காட்டு மிருகங்களைப்போல் ஊளையிடுவதும்.... பாஸ்டர்கள் மேடையில் எழுந்து நின்று, ஜனங்களிடத்தில் **பரிசுத்தாவியின் அபிஷேகத்தை ஊதுவதைப்போல் ஊதி,** ஜனங்களைக் கீழே தள்ளுவதும்..... தன் கோட்டுச் சட்டையை நாலா பக்கமும் சுழற்றி "கர்த்தருடைய கரம்" உங்கள்மேல் வந்துவிட்டது எனக்கூறி ஜனங்களை தள்ளாட வைத்து அசர வைப்பதும்.... இதுதானே இன்று ஜனங்கள் காணும் எழுப்புதல்! இவற்றையெல்லாம் நான் காணும்போது, என் நெஞ்சில் விசாரமும், உள்ளத்தில் அழுகையும் ஏற்படுகிறது! அன்பார்ந்த தேவ ஜனமே "புதிய - எழுப்புதல்" என இவர்கள் கூறும் யாதொன்றும் **வேதப்புத்தகத்தில் இல்லையென்றால்,** அவைகளை தேவ வைராக்கியத்தோடு எதிர்த்து நிற்க வேண்டியது உங்கள் மேல் விழுந்த தேவ கட்டளை என்பதை அறிந்துகொள்ளுங்கள்!

இன்று ஆத்துமாக்கள் இவ்வுலகமெங்கும் அழிந்து கொண்டிருக்கிறார்கள்! ஆனால், இவர்களோ "சிரிக்கும் - சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறார்கள்". இவ்வுலகில் யுத்த களத்தில் சிக்கியிருக்கும் பல நாடுகள் உண்டு! அங்கு அகதிகள் முகாமில் தன் கணவன் கொல்லப்பட்டு அழுது கொண்டிருக்கும் தாய், தன் மகள் கற்பழிக்கப்பட்டு வேதனையிலிருக்கும் குடும்பங்கள், பசியின் கொடுமையால் தவித்து வாடும் பிள்ளைகள், ஆகிய

*இவர்களிடம் சென்று பகட்டு பிரசங்கிகள் "சிரிக்கும் - சுவிசேஷத்தைப்" பிரசங்கிக்கக்கூடுமா? இது கொடுமையல்லவா!*

*இன்று 'யார் சிரிக்கிறார்கள்' என நான் உங்களுக்குக் கூறுகிறேன்! உலகமும், அவபக்தியான புற ஜாதிகளும் இந்த கிறிஸ்தவர்களைப் பார்த்து பரிகசித்து சிரிக்கிறார்கள்!*

*கிறிஸ்துவின் வருகை மிக சமீபமாயிருக்கும் இந்நாட்களில், அழிந்திடும் ஆத்துமாக்களுக்காய் அழுது ஜெபிக்க வேண்டிய சபைகள், தனக்குண்டான யாவற்றையும் வெறுத்து உத்தம சீஷர்களாய் இயேசுவைப் பின்பற்ற வேண்டிய சபைகள்.... இன்று, உலகத்தின் கண்களுக்கு "சர்க்கஸ் கூடாரம்போல்" காட்சியளித்துக் கொண்டிருக்கிறது!*

**என்னைப் பற்றி யார் என்ன வேண்டுமானாலும் எண்ணிக் கொள்ளட்டும் அல்லது கோபமடையட்டும்! நானோ ஆத்துமாக்களின் மீது அக்கறை கொண்டவன்! அவர்களின் குருட்டுத் தன்மைக்காய் வேதனை அடைபவன்! ஆகவே அவர்களைப் பார்த்து "தேவனுடைய பரிசுத்த சபைக்கு" ஏற்பட்டுவிட்ட நிந்தையைப் பாருங்கள் என எச்சரிப்பு விடுக்கும் அழைப்பையும் தேவனிடமிருந்து பெற்றவன்!**

*இக்கயமை பிரசங்கிகளின் கூட்டத்திற்கு உங்களை யாராவது அழைத்தால் "என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். நான் வர மாட்டேன்! வசந்தமான பரிசுத்தத்தை இழந்து வாடிவிட நான் விரும்பவில்லை! நான் வளர்ச்சியடைய வகை செய்யும் தூய்மையான கர்த்தருடைய வசனங்கள் எனக்குப்போதும்! 'என் மாம்சத்திற்கு நானே தீனி போட வகை செய்யும்' எந்த செய்தியும் எனக்கு வேண்டாம்! என் ஆவியை பொருளாசைக்குத் தூண்டும் எந்தப் பிரசங்கத்தையும் நான் அவருவருக்கிறேன்!" என ஆணித்தரமான உறுதியோடு சொல்லி விடுங்கள்! உங்களை காத்துக்கொள்ளுங்கள்!*

*- டேவிட் வில்கர்ஸன் USA*

---

## ஒவ்வொரு கிறிஸ்தவனும், ஒரு சுவிசேஷ படை வீரன்!

*தன் சுவிசேஷ அழைப்பை இழப்பது சோகம்*

*இன்று சபை, கிறிஸ்துவை "மகா பிரதான ஆசாரியர்" என்றே போற்றி மகிழ்கின்றது! கிறிஸ்து பிரதான ஆசாரியர் என்பதை நாம் எவ்வாறு அறிந்து கொண்டோம்? எபிரெயர் 3:1; 4:14 ஆகிய வசனங்களில் இந்த உண்மையை வேதம் தெளிவாய் நமக்கு கூறுகிறது. ஆகிலும், இதே வேதாகமம்,* **அனைத்து கிறிஸ்தவ விசுவாசிகளையும் 'ஆசாரியர்கள்' (1பேதுரு 2:5,9) என எடுத்துரைப்பதை ஏற்று அங்கீகரிக்க**

*இன்றுள்ள சபைகள் தயங்குவது ஏன்? இந்த ஸ்தானம் பரலோக ராஜ்ஜியத்தின் ஆளுகைக்கு மாத்திரமல்ல (வெளி.1:6), இந்த பூமியில் நாம் பரதேசிகளாய் ஜீவிக்கும் இக்காலத்திற்கும் ஏற்றதாகும் (1பேதுரு 2:9,11). சபை குருமார்களையும், பாமர விசுவாசிகளையும் இரு வகையாக பிரித்திட, வேதாகமத்தில் எங்காவது அனுமதி வழங்கப்பட்டுள்ளதா? புதிய ஏற்பாட்டு சபையில் "ஆசாரியர்கள், ஆசாரியர் அல்லாதவர்கள்" என ஒருவருமேயில்லை! ஆனால், வேதப்பூர்வமற்ற இந்த இரு வகுப்பு பிரிவினையால், சபையிலுள்ள அங்கத்தினர்கள் ஓர் படை அணியில் இருப்பவர்களாய் இல்லாமல், வெறும் பார்வையாளர்களாய் இருக்கிறார்கள்.*

**இதனிமித்தமே சபையிலுள்ள 'சாதாரண மனிதர்கள்' சுவிசேஷ பணியில் நேரடி ஈடுபாடு இல்லாதவர்களாய் இருக்கிறார்கள். அன்று சபையின் "அலங்கார வாசலில்" கிடந்த சப்பாணியைப்போலவே நீண்ட காலமாய் இருக்கிறார்கள். அவர்களுக்கு உயிர் இருப்பதைப்போல் தோன்றினாலும், அவர்கள் சப்பாணிகள்! ஒவ்வொரு கிறிஸ்தவனும் 'ஓர் சிலுவை வீரனாய்' சுவிசேஷத்தின் கொடியை ஏந்திச் செல்ல வேண்டும்!**

*இன்று சபையை தாக்கியிருக்கும் மற்றொரு சோகம் என்னவென்றால், 'ஒவ்வொரு சுவிசேஷகர்களும்' தங்களையும் தங்கள் ஊழியங்களையும் ஆதரிக்கும்படியே ஜனங்களுக்கு அழைப்பு விடுக்கிறார்கள். இது என்ன? 'பணத்தை ஜனங்களிடமிருந்து அபகரிக்கும்' செயல் அல்லவா? ஆனால், வேதம் போதிக்கும் உண்மை என்னவென்றால்,* **இவ்வித அழைப்பு** *ஒரு சுவிசேஷகனின் வேலை இல்லை! இதை குறிப்பிட்டுக் கூறும் எபேசியர் 4:11,12 வசனங்களை எடுத்துப் பாருங்கள்: "பரிசுத்தவான்கள் சீர்பொருந்தப் பண்ணும் பொருட்டு சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமான சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும் அவர் சிலரை அப்போஸ்தலராகவும், தீர்க்கதரிசிகளாகவும், சுவிசேஷகராகவும், மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்" என வாசிக்கிறோம். இந்த நிருபம், சர்வ சங்க சபைகளுக்கும் எழுதப்பட்ட பொதுவான நிருபம் ஆகும்.*

*இங்கு கூறப்பட்டுள்ள சுவிசேஷகர்கள், இரட்சிக்கப்படாத மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பது மாத்திரம் அல்லாமல், 'ஒவ்வொரு கிறிஸ்தவனையும்' ஆத்தும ஆதாயம் செய்யும் வீரனாய், சீர்ப்படுத்தவும், அவர்களை சுவிசேஷ பணியில் தீவிரமாய் செயல்படுத்தவும் கட்டளை பெற்றிருக்கிறார்கள்! இவ்வளவு பெரிய பொறுப்பானது, இன்று முற்றிலுமாய் அலட்சியப்படுத்தப்பட்டுள்ளது! எப்போதெல்லாம் ஒரு*

சுவிசேஷகன் 'ஒரு ஸ்தல சபைக்கு' செல்லுகிறாரோ அப்போதெல்லாம், கூடியுள்ள சபை மக்கள் எவ்வாறு ஒரு மனிதனை கிறிஸ்துவுக்குள் கொண்டு வர வேண்டும்? எனவும் போதிக்க வேண்டும்! ஆனால் இன்று நடப்பது என்ன? மற்ற ஸ்தல சபைகளுக்குச் செல்லும் ஒரு சுவிசேஷகன் "ஞாயிறுதோறும் சபை பீடத்தைச் சுற்றி குளிர் காய்ந்து கொண்டிருக்கும் **சுவிசேஷத்தைப் பெற்ற அவர்களுக்கே** மீண்டும் மீண்டுமாய் சுவிசேஷத்தைப் பேசி," திருப்தி அடைகிறார்கள். இன்றைய மிஷனெரி ஸ்தாபனங்கள் கூட, இதே தவற்றை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள்.

**சுவிசேஷ ஊழியர்கள், 'தங்களை ஆதரிப்பவர்களை' பெருக வைப்பதில் மகிழ்ச்சி அடைந்து, ஆத்தும ஆதாய ஊழியர்களை எழுப்புவதற்கு தவறிவிட்டார்கள்!**

மிஷனெரி ஸ்தாபனங்கள், தனி நபர்களை ஆத்தும ஆதாயம் செய்யவும், திரள் மக்களுக்கு சுவிசேஷ பணி செய்யவும் விசேஷமாய் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்! தங்கள் சபை மக்களை சுவிசேஷ பணிக்கு துரிதமாய் பயிற்சி அளிக்க வேண்டும். அப்போது மாத்திரமே முழு சபையாய் இணைந்து சுவிசேஷப் பணியை முழுமையாய் தாங்கி, முழு உலகத்திற்கும் கொண்டு செல்ல முடியும்! ஒவ்வொரு ஊழியனுடைய ஊழியமும், ஒவ்வொரு விசுவாசியையும் ஒரு ஊழியனாய் மாற்றுவதேயாகும்! (எபேசியர் 4:11,12).

**அன்பார்ந்த கிறிஸ்தவ நண்பனே "நீங்கள் இரட்சிக்கப்பட்டதே பிறரை இரட்சிப்பதற்கு தான்! நீங்கள் பரிசுத்தமாக்கப்படுவதும், பிறரை இரட்சிப்பதற்காகவே!" இதுவே, கிறிஸ்துவை பின்பற்றுவதின் பிரதான நோக்கமாகும்! (மத்.4:19).**

மற்ற அனைத்தும், அடுத்தடுத்து வருவதாகும்! அறைகூவல் விடுக்கும் இந்த சத்தியத்தை ஒரு சில சபை மேய்ப்பர்கள் மாத்திரமே நன்றாய் விளங்கிக்கொண்டு, தங்கள் சபை மக்கள், பாவிகளை தேடிச் சென்று சுவிசேஷப் பணியாற்ற ஊக்குவிக்கிறார்கள்!

ஆனால், சபை ஊழியர்களில் பெரும்பாலோர் 'தங்கள் ஆடுகளை' தங்களுக்காகவே பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். "சபையிலுள்ள ஆடுகளே குட்டிகளைப்போட வேண்டும், அந்த மேய்ப்பன் அல்ல". இந்த உண்மையைகூட சபையில் உள்ள போதகர்கள் மறந்துவிட்டார்கள்! தெசலோனிக்கேய சபையை சற்று ஏறிட்டுப் பாருங்கள். அங்குள்ள சபை மக்கள் "எல்லா இடங்களிலேயும்" கர்த்தருடைய சுவிசேஷத்தை அறிவித்தார்கள்! மேலும், அவர்களுடைய சுவிசேஷ வசனங்கள் "மிகுந்த வல்லமையோடு" இருந்ததாகவும்..... அவர்களிடமிருந்து

புறப்பட்ட கர்த்தருடைய சுவிசேஷத்தைக் குறித்து, யாதொரு குறையும் சொல்ல முடியாத அளவிற்கு 'வெகு சிறப்பாய் இருந்தது' எனவும் அப்போஸ்தலர்களே சாட்சி கொடுத்தனர்! **(1தெச.1:5-8).**

*- R.ஸ்டான்லி BYM*

---

## 'இயேசுவுக்கே' சீஷர்கள் வேண்டும்!

*குருவாகிய இயேசுவை பின்பற்றுங்கள்*

இயேசுவை குருவாய் ஏற்று, அவரைப் பின்பற்ற அழைக்கப்பட்டவர்களே சீஷர்கள்! வேறு யாரைக்காட்டிலும், வேறு எதைக்காட்டிலும் இந்த சீஷர்கள் தங்கள் குருவாகிய இயேசுவையே அதிகமாய் அன்புகூர்வார்கள்! அன்பின் அழைப்பிற்கு 'கட்டாயம்' இருப்பதில்லை! ஆகவேதான், "ஒருவன் என்னைப் பின்பற்ற விரும்பினால்" என்றே இயேசு நயந்து கூறினார்! (லூக்.**9:23**). "பாரசுமையான சொந்த வாழ்க்கையை இழந்து" இயேசுவைப் பின்பற்றுவது போன்ற இலகுவான வாழ்க்கை வேறில்லை!

**நம் குரு நடக்கச்செய்த 'சிலுவையின் வழியில்' அவரது ஆறுதலும், பிரசன்னமும், ஜீவனும் கொட்டிக்கிடக்கின்றது! ஆகவே மனப்பூர்வமாய் தன் குருவைக் கண்டு அவரது அடிச்சுவடு செல்பவனே அவரது உத்தம சீஷன்!**

இதற்குமாறாக, அன்று அப்போஸ்தலர் **5:36,37** - வசனங்கள் எச்சரிக்கிறபடி, சிலர் தங்களை 'பெரியவனாக' (குருவாக) மேன்மைபாராட்டி, அன்று அப்போஸ்தலர் காலத்திலிருந்த கலிலேயனாகிய யூதாஸ் என்பவனைப்போல், அனேக ஜனங்களைத் தன்னைப் பின்பற்றும்படி 'இழுத்து' கட்டாயப்படுத்துவான்! என வாசிக்கிறோம். அவ்வித கட்டாயம், பணத்தையோ, அல்லது பதவியையோ வைத்து நயம் காட்டி அல்லது அவர்களை வேத வசனத்தை 'மிரட்டலாக' காண்பித்தோ, தனக்கு கீழ்ப்படியும்படி செய்தான்! பின்பு அவனும் அழிந்து அவனுக்கு கீழ்ப்படிந்தவர்களும் சிதறிப்போனார்கள்!

**'ஒரு மனிதனாய்' தன்னை உயர்த்தி, 'தன்னைப் பின்பற்ற' ஜனங்களை கட்டாயப்படுத்தி, 'தனக்கு கீழ்ப்படியச்' செய்பவனாயிருந்தால், அதுவே "தனிமனித ஆராதனை" CULT என வேதம் எச்சரிக்கிறது!**

இயேசு ஒருவருக்கே சீஷர்கள் வேண்டும்.... எந்த ஒரு தனிமனிதனுக்கும் 'சீஷனாக' மாறிவிடாதிருக்க, நாம் யாவரும் எச்சரிக்கையாய் இருக்கக்கடவோம்!

*- T.ரத்தினகுமார்*

பிறருடைய இரட்சிப்பிற்குத் தன்னையே ஈந்தவர்!

# ராபர்ட் ஏனென்



ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த டண்டீ என்ற துறைமுகப் பட்டிணத்தில் 1834-ம் ஆண்டு பிறந்த இராபர்ட் ஏனென் தன் வாலிப நாட்களில், அங்குள்ள ஒரு பெரிய அரங்கில் நடந்த நற்செய்தி கூட்டத்தில், 'எவ்வளவு பெரிய பாவி நான்!' என்று உணரத் துவங்கினார்.

பெருமூச்சோடு வீட்டுக்குத் திரும்பி, முழங்காற்படியிட்டு, சுற்றுப்புறத்தைப் பற்றிய உணர்வேயில்லாமல் அவர் தொடர்ந்து பதின்மூன்று மணி நேரம் ஆண்டவருடைய இரக்கத்துக்காக அழுது புலம்பி, பூரண விசுவாசத்தோடு தன்னை இயேசுவானவரின் கரங்களில் முழுவதுமாக ஒப்புக்கொடுத்தார்! உடனடியாக மற்றவர்களுக்குக் கிறிஸ்துவைப் பற்றிக் கூற வேண்டுமென்ற வாஞ்சையைப் பெற்றார். அவருடைய துன்மார்க்க ஜீவியத்தை அறிந்த பலர் 'குடிவெறியில், சண்டைகளில் ஈடுபட்டுவந்த இளைஞனா இவர்?' என வியப்படைந்தார்கள். அவருடைய ஒளிவீசும் முகமே, இருதயத்தில் ஏற்பட்ட மாற்றத்துக்குச் சாட்சியாக விளங்கியது! பகல் முழுவதும் ஒரு கட்டிடத் தொழிலாளியாக அவர் கடுமையான வேலையில் ஈடுபட்டிருந்தபோதிலும், மாலையில் அவர் ஓய்வெடுப்பது கிடையாது. ஏதேனும் தெருமுனையில் நற்செய்தி அறிவிக்கச் சென்றுவிடுவார்!

1862-ம் ஆண்டு தன் விசுவாச வாழ்க்கைக்கு ஏற்ற ஜூன் என்ற பெண்மணியை மணந்துகொண்டார். ஒருமுறை ஜூன் தன் கணவரிடம், "ஐந்து ஷில்லிங் கொடுத்தால் உங்கள் உருவப்படத்தை அப்படியே வரைந்து கொடுக்கிறார்களாம்" என்று கூறினாள். "என்னிடம் ஐந்து ஷில்லிங்குகள் இருக்குமானால், கைப்பிரதிகளை வாங்கி எளிய பாவிகளுக்கு விநியோகம் செய்வேனே!" என்று பதிலளித்தார் இராபர்ட்.

ஒருமுறை கிளாஸ்கோ நகருக்கு வந்து 'அதிக ஊதியம் தரும்' புதிய வேலை ஒன்றை ஏற்றுக்கொள்ளும்படி, இராபர்ட்டுக்கு அழைப்பு வந்தது. "இப்போதுதான் தேவன் இங்கே டண்டீயில் என்னுடைய எளிய ஊழிய முயற்சிகளை ஆசீர்வதிக்கத் துவங்கியிருக்கிறார். நான் இதை விட்டுச் செல்ல மாட்டேன். பணம் சம்பாதிப்பதைவிட ஆத்துமாக்களை ஆதாயம் செய்வது மேன்மையானது" என்று இராபர்ட் கூறிவிட்டார்.

அவரது 33வது வயதில், 1867ம் ஆண்டு ஜூலை மாதம் அவர் துறைமுகத்துக்கு அருகே ஒரு கட்டுமானப் பணியில் வேலை செய்யும்போது, திடீரென்று ஒரு 16 வயது பையன் ஒருவன் கடலில் தவறி விழுந்து தத்தளித்துக்கொண்டிருந்தான்! அவனைக் காப்பாற்றும்படி கடலில் குதித்து, சிறுவனைக் காப்பாற்றி கரைக்குக் கொண்டு வந்தார் இராபர்ட். மற்றவர்கள் கைநீட்டி அவனை வாங்கி கொண்டார்கள்! சிறுவனின் உயிரைக் காப்பாற்றிய அவரை மற்றவர்களால் காப்பாற்ற முடியவில்லை! அவர் தனது இரட்சகரின் கரங்களைச் சென்றடைந்து விட்டார்! இராபர்ட்டின் மரணம் டண்டீ பட்டணத்தையே உலுக்கியது! அதுவரை அவருடைய பிரசங்கங்களைக் கேட்டும், அலட்சியமாக இருந்த பலர் தங்கள் நித்தியத்தை குறித்துச் சிந்திக்கத் துவங்கினார்கள்! இராபர்ட் ஏனெனின் மரணம் பல புதிய கனிகளைப் பெற்றுத் தந்தது! இன்றும்கூட, அவரது சுவிசேஷ தியாக வாஞ்சை, அனேகரை ஆசீர்வதித்து வருகிறது!

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## உங்களைத் தேடி வந்த 'நற்செய்தி' தேவனால் அருளப்பட்டது!

ஒரு நாள் நள்ளிரவு ஒரு மணி இருக்கும். ஊழியத்தின் மிகுந்த களைப்போடு நான் எனது படுக்கைக்கு செல்ல ஆயத்தமானேன். அந்த சமயம் "எழுந்து வெளியே செல்" என்ற ஒரு வார்த்தை தொனிப்பதை நான் கவனித்தேன். அப்பொழுது "நான் மிகவும் களைப்பாக இருக்கின்றேன். எனது கால்கள் இரண்டும் நோவு எடுக்கிறது. எனக்குள்ளாக நித்திரை மயக்கமாகவும் இருக்கின்றேன்" என்று பதில் கூறினேன். ஆனால், திரும்பவும் அந்தக் குரல் "எழுந்து வெளியே செல்" என்று தொனித்தது. உடனே நான் கீழ்ப்படிந்து, எனது மேல் கோட்டைப் போட்டுக்கொண்டு கராச்சி பட்டணத்தில் வாழும் பற்பல மொழி பேசும் மக்களுக்கு தேவையான பற்பல மொழிகளில் எழுதப்பட்ட சுவிசேஷ துண்டுப்பிரதிகளை எனது கோட்டுப் பைகளுக்குள் எடுத்து வைத்துக்கொண்டு பட்டணத்துக்குள் கிளம்பினேன்.

நான் சற்று நேரம் பட்டணத்தின் வீதியில் சென்று கொண்டிருக்கையில் அந்த நள்ளிரவு நேரம், எனக்கு முன்பாக இரண்டு வாலிபர்கள் நடந்து சென்று கொண்டிருந்தனர். நான் அவர்களைக் கூப்பிட்டு "தயவு செய்து நில்லுங்கள். நான் உங்களிடம் சொல்ல வேண்டிய ஒரு காரியம் உள்ளது" என்று சொன்னேன். அவர்கள் நின்றதும், நான் அவர்கள் அருகில் சென்று நான் படுப்பதற்காக சற்று நேரத்திற்கு முன் "நான் வெளியே போகும்படியாக என்னிடம் பேசுகிற கடவுளுடைய குரலைக் கேட்டேன். உங்களை சந்திக்கும்படியாகவே கடவுள் என்னை அனுப்பி இருக்கின்றார்" என்று கூறினேன். அதைக் கேட்ட அவர்கள் "ஆ, அது உண்மைதான், கடவுள் உங்களை எங்களிடம் அனுப்பி உள்ளார் என்பதை நாங்கள் நம்புகின்றோம். ஏனெனில், நிம்மதி இல்லாது படுக்கையிலிருந்த எங்களை இந்த வீதியில் நடந்து செல்லச் செய்ததும், இறைவன் செயலே! நீங்கள் சொல்ல விரும்பிய "கடவுளுடைய செய்தியை எங்களுக்குச் சொல்லுங்கள்" என்று கூறினார்கள்! உடனே, நான் எனது வேதாகமத்தை திறந்து சில வேத பகுதிகளை அவர்களுக்கு வாசித்துக் காண்பித்த பின்னர், எனது மனந்திரும்புதலின் சரித்திரத்தை அவர்களிடம் பகிர்ந்து கொண்டேன். அந்த வாலிபர்களில் ஒருவனான குல்கர்னி என்பவன் "கடவுள் உங்களை எனக்காகவே அனுப்பி இருக்கின்றார்" என்று கூறி, ஒரு வேதப்புத்தகத்தையும் என்னிடமிருந்து விலைகொடுத்து வாங்கிச் சென்றான். அத்துடன் கர்த்தராகிய இயேசு இரட்சகரையும் முழு மனதோடு அந்த நள்ளிரவில் விசுவாசித்து இரட்சிக்கப்பட்டான்!

- சுவிசேஷ மலர்

பணம் அனுப்ப QR பயன்படுத்தவும்

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**

maduraichristianfellowship@indianbk